**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

14.09.2022

MCOP.. 149/ 2020 C/W.167/2020

ம.சா. 1 ராஜேஸ்வரி

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் நாள் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.ஸ்ரீவித்யா.,B.Com.,M.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - | ஜாதி | - |
| தந்தை பெயர்; | - | சமயம் | - |
| கிராமம் | - | தொழில் | - |
| தாலூக்கா | - | வயது | - |

<u>முதல் விசாரணை -</u>

நான் மனுதாரர் எனது தரப்பு முதல்நிலை விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன், பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன், அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை, பிரமாண வாக்குமூலத்தை முதல்நிலை விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் கூறியுள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை சான்று நகல் மசாஆ.1, காயச்சான்ற நகல் மசாஆ.2, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் மசாஆ.3, பார்வை மகஜர் நகல் மசாஆ.4, மாதிரி வரைபடம் நகல் மசாஆ.5, ஒகேனக்கல் காவல்நிலைய ஆய்வாளர் வழங்கிய கடிதம் அசல் மசாஆ.6, கோவை கங்கா மருத்துவமனை வழங்கிய டிஸ்சா்ஜ் சம்மரி அசல் மசாஆ.7, கோவை கங்கமருத்துவமனை வழங்கிய மருத்துவமனை பில்கள் ரூ.58,201/- அசல் மசாஆ.8, மனுதாரரின் ஆதார் கார்டு நகல் மசாஆ.9, வங்கிக்ணக்கு புத்தகம் நகல் மசாஆ.10, பான்கார்டு நகல் மசாஆ.11 ( மசாஆ.8 ஆவணத்தை பொறுத்து எதிர்தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்ட்டது) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்குவிசாரணை:

நான் தர்மபுரி மாவட்டத்தில் அண்ணாமலைஹள்ளி, அனுமந்தபுரத்தில் வசித்துவருகிறேன். நான் தற்போது கட்டிட வேலைக்கு சென்றுவருகிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட விபத்து எங்கிருந்து எங்கே செல்லும் போது ஏற்பட்டது என்று கேட்டால் பென்னாகரத்திலிருந்து ஒகேனக்கல் செல்லும்போது ஏற்பட்டது. எந்த வண்டியில் சென்றோம் என்றால் வேனில் சென்றோம். அந்த வேனில் சுமார் 15 பேர் சென்றிருப்போமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நிறையபேர் சென்றோம். நாங்கள் சென்ற மேக்சிகேப் என்ற வாகனத்தில் 13 பேர்தான் செல்லமுடியும் என்று சொன்னாலும், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் நாங்கள் 34 பேர் சென்றதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னாலும், இந்த வழக்கிற்காக கூறப்பட்ட பொய்யயான சங்கதிகள் என்று சொன்னாலும் தவறு. எங்கள் வாகனத்திற்கு எதிரே போய்க்கொண்டிருந்த வாகனத்தை முந்தி செல்லவேண்டும் என்பதற்காக ஓட்டுநர் அதிகவேகமாக எங்கள் வாகனத்தை இயக்கியதால்தான் நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கவிழ்ந்த வாகனத்தில் அடிபட்ட நபர்களுக்கு உதவி செய்வதற்காக அந்த சமயத்தில் சிலர் வந்திருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். கம்பிவேலைக்கு அருகில் விபத்து ஏற்பட்டதால் உதவி செய்ய வந்தவர்களுக்கும் கம்பி கிழித்து காயம் ஏற்பட்டதால் அவர்களுக்கும் சேர்த்து நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே, காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. 13 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அதிக நபர்கள் பயணம் செய்ததாக கண்டுள்ளதன் அடிப்படையில் காப்பீடு விதிமீறல்களின் அடிப்படையில் காப்பீடு நிறுவனம் நஷ்டஈடு வழங்கஇயலாது என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் நான் தர்மபுரி அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதற்கான O.P. Register-ஐ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அங்கு முதல் உதவி மட்டும் செய்யப்பட்டு, பின்பு, கங்கா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டேன். எனக்கு விபத்தினால் முதுகு தண்டுவடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் என்னால் எந்த வேலையும் செய்யமுடியவில்லை என்று கூறியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டிட வேலை செய்வதன் மூலம் மாதம் ரூ.6,000/- சம்பாதிக்கிறேன் என்று கூறியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வயது, வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த 19.9.2017 வழக்கு தள்ளுபடியான தேதி முதல் மீண்டும் வழக்கை கோப்புக்கு எடுத்த தேதிவரை காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகபட்சமானது என்று சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறியதால் இழப்பீடு தொகையை பெறஇயலாது என்று சொன்னால் சரியல்ல. எனவே, என்னுடைய இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>**

14.09.2022

MCOP.. 149/ 2020 C/W.167/2020

ம.சா. 2 மகேஸ்வரி

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் நாள் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.ஸ்ரீவித்யா.,B.Com.,M.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - | ஜாதி | - |
| தந்தை பெயர்; | - | சமயம் | - |
| கிராமம் | - | தொழில் | - |
| தாலூக்கா | - | வயது | - |

<u>முதல் விசாரணை -</u>

நான் 2ம்மனுதாரர் எனது தரப்பு முதல்நிலை விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன், பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன், அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை, பிரமாண வாக்குமூலத்தை முதல்நிலை விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் கூறியுள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன். எம்சிஓபி.167/2020 ல் மனுதாரர் மகேஸ்வரியின் விபத்து பதிவேடு நகல் மசாஆ.12, மனுதாரரின் ஆதார் கார்டு நகல் மசாஆ.13, வங்கி கணக்கு புத்தகம் நகல் மசாஆ.14, பான் கார்டு நகல் மசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணை:

நான் தர்மபுரி மாவட்டத்தில் அண்ணாமலைஹள்ளி, அனுமந்தபுரத்தில் வசித்துவருகிறேன். நான் தற்போது விவசாயம் செய்துவருகிறேன். மாடு வைத்துள்ளேன். மேற்படி விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ, மனுவிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கிற்காக வேண்டி இழப்பீடு பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக அவ்வாறு மாடு வைத்துள்ளதாகவும், விவசாயம் செய்துவருவதாகவும் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட விபத்து எங்கிருந்து எங்கே செல்லும் போது ஏற்பட்டது என்று கேட்டால் பென்னாகரத்திலிருந்து ஒகேனக்கல் செல்லும்போது ஏற்பட்டது. எந்த வண்டியில் சென்றோம் என்றால் வேனில் சென்றோம். அந்த வேனில் சுமார் 15 பேர் சென்றிருப்போமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நிறையபேர் சென்றோம். நாங்கள் சென்ற மேக்கிகேப் என்ற வாகனத்தில் 13 பேர்தான் செல்லமுடியும் என்று சொன்னாலும், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் நாங்கள் 34 பேர் சென்றதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னாலும், இந்த வழக்கிற்காக கூறப்பட்ட பொய்யான சங்கதிகள் என்று சொன்னாலும் தவறு. எங்கள் வாகனத்திற்கு எதிரே போய்க்கொண்டிருந்த வாகனத்தை முந்தி செல்லவேண்டும் என்பதற்காக ஓட்டுநர் அதிகவேகமாக எங்கள் வாகனத்தை இயக்கியதால்தான் நாங்கள் சென்ற வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கவிழ்ந்த வாகனத்தில் அடிபட்ட நபர்களுக்கு உதவி செய்வதற்காக அந்த சமயத்தில் சிலர் வந்திருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். கம்பிவேலைக்கு அருகில் விபத்து ஏற்பட்டதால் உதவி செய்ய வந்தவர்களுக்கும் கம்பி கிழித்து காயம் ஏற்பட்டதால் அவர்களுக்கும் சேர்த்து நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே, காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. 13 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அதிக நபர்கள் பயணம் செய்ததாக கண்டுள்ளதன் அடிப்படையில் காப்பீடு விதிமீறல்களின் அடிப்படையில் காப்பீடு நிறுவனம் நஷ்டஈடு வழங்கஇயலாது என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் நான் தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதற்கான O.P. Register-ஐ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அங்கு முதல் உதவி மட்டும் செய்யப்பட்டு, பின்பு, வீட்டுக்கு சென்றுவிட்டேன். எனக்கு விபத்தினால் வலது தோள்பட்டையில் அடிபட்டது. அதனால் எனக்கு கை தூக்கமுடிவதில்லை.விபத்தில் எனக்கு கை தோள்பட்டையில் அடிபட்டதால் என்னால் எந்த வேலையும் செய்யமுடியவில்லை என்று கூறியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தொடர்சிகிச்சை மேற்கொண்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விவசாயம் செய்வதன் மூலம் மாதம் ரூ.6,000/- சம்பாதிக்கிறேன் என்று கூறியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வயது, வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த 19.9.2017 வழக்கு தள்ளுபடியான தேதி முதல் மீண்டும் வழக்கை கோப்புக்கு எடுத்த தேதிவரை காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகபட்சமானது என்று சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறியதால் இழப்பீடு தொகையை பெறஇயலாது என்று சொன்னால் சரியல்ல. எனவே, என்னுடைய இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.